# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 4. நடைபாதைப் பயனாளர்கள்/பாதசாரிகள்

**விளக்கம்** - மக்கள் தினமும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். தொற்றா நோய்களைக் குறைக்கும் நோக்குடன் நாங்கள் உடற்பயிற்சிச் செயல்பாடுகளை ஊக்குவித்து வருகிறோம். பல உள்ளூராட்சி மன்றங்களும் நடைபயிற்சிக்கான இடங்களை உருவாக்கியுள்ளன. இவை வழக்கமாக நன்கு பயன்படுத்தப்படும் பொழுதுபோக்கு மற்றும் சமூகமயமாக்கலுக்கான பொது இடங்களாக மாறியுள்ளன.

பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்

உள்ளூராட்சி அமைப்புகள்

- இந்த இடங்கள் உடல் செயல்பாடுகளுக்காகப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்காகத் திறக்கப்படலாம் - நடைப்பயிற்சி/ துள்ளிஓடுதல் / ஈருருளி ஓடுதல் ஆகியவற்றிற்கு மட்டுமே கண்டிப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.
- ஆரம்பத்தில் இந்த இடங்களை பொழுதுபோக்குதல்/ சமுதாய ஒன்றுகூடல்கள் ஆகியனவற்றிற்குப் பயன்படுத்தக்கூடாது (அரசாங்கத்தினால் கால எல்லை அறிவிக்கப்படும்).
- ஒற்றை திசை நடை வழி (*Uni directional flow*) உறுதியாகப் பரிந்துரைக்கப்பட வேண்டும் இதைக் குறிப்பிடும் வகையில் அம்புக்குறிகள் வரையப்படலாம்.
- ஈருருளிகளை வாடகைக்கு வழங்கும் போது ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் இடையில் தேவையான அளவு தொற்றுநீக்கம் செய்தே வழங்க வேண்டும்.
- பயன்பாட்டின் பின்னர் ஈருருளியைக் கையளிக்கும் முன்னர் பயனாளர் அதன் கைப்பிடிகளை அவருக்கு வழங்கப்படும் தொற்றுநீக்கையைப் பயன்படுத்திச் சுத்தம் செய்ய வேண்டும்.
- உடல் ரீதியான இடைவெளியினைப் பேணுதல்;, கைச் சுகாதாரம் என்பவற்றுடன் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முகக்கவசங்களை அணிதல் ஆகியன குறித்த கடுமையான அறிவுறுத்தல்களுடன் உணவு விற்பனை நிலையங்கள் (*Food outlets*) செயற்படுவதனை அனுமதிக்க முடியும். நடமாடும் உணவு விற்பனையாளர்கள் அல்லது சிற்றுண்டிச்சாலை வசதிகள் (*Cafeteria*) கண்டிப்பாக தடை செய்யப்பட வேண்டும்.
- உணவு விற்பனை நிலையங்களில் பணிபுரியும் அனைத்து நபர்களுக்கும் எவ்வாறு சரியான முறையில் கைச் சுகாதாரம், சுவாச நற்பழக்கங்கள் மற்றும் முறையாக முகக்கவசங்களை அணிதல் ஆகியவற்றினை மேற்கொள்வது என்பது குறித்த தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். சுவாச நோய் அறிகுறிகளுடன் நோய்வாய்ப்பட்டால் வேலைக்கு வருவதைத் தவிர்க்குமாறு அனைவருக்கும் தெளிவாக அறிவுறுத்தப்பட வேண்டும்.
- எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான வழிமுறைகளைக் காண்பிக்கவும்

**நடைபாதையைப் பயன்படுத்தும் நபர்கள்:**

- குழுச் செயற்பாடுகளுக்கு அனுமதி இல்லை.
- அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும்.
- தயவு செய்து பிறருக்கும் உங்களுக்கும் இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியை பேணுங்கள்.
- ஒற்றை திசை நடை வழியினைக் காட்டும் குறியீடுகளைப் பின்தொடரவும்.
- உணவு விற்பனை நிலையங்களைப் பயன்படுத்தும் போது ஒரு மீற்றர் தூரத்தை பேணுவதுடன் முகக்கவசத்தினையும் அணியவும்.

அறிவுறுத்தும் முறைகள்

- விளம்பரப் பதாகைகள் மற்றும் தட்டிகள்.



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.



28.06.2020